[1973 நவம்பர் 28

சாத்தனூரில் சுற்றுலா விடுதி

* 455 வினா.—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டில் சுற்றுலா திட்டத்தில் மூன்று ஸ்டார் ஓட்டல் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: சாத்தனூர் அணையைப் பார்ப்பதற்கு தினந்தோறும் 1000 பிரயாணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை அவசியம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டம் செயல்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுதே சுற்றுப் பயணிகள் போய்த் தங்குவதற்கு வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று ஸ்டார் ஹோட்டல் கட்டு வதற்குத் தனியார் விண்ணப்பித்தால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ஆறுமுகம்: சாத்தனூர் பகுதியில் அணை நிர்மாணிக்கப் பட்ட பொழுதிருந்த ஷெட்கள்தான் இருக்கின்றன. விசேஷமாக பிரயாணிகள் தங்குவதற்கு இடம் இல்லை என்பதை அரசு அறியுமா? ஆமெனில் அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது பல்வேறு பகுதிகளில் திட்டப் பகுதி இல்லம், மேம்படுத்தப்பட்ட விருந்தினர் இல்லங்கள்—'சி' மேம்படுத்தப்பட்ட வகை, 'எஸ்' மேம்படுத்தப்பட்ட வகை—'டி' மேம்படுத்தப்பட்ட வகை, மேம்படுத்தப்படாத விருந்தினர் இல்லங்கள்—'அ' வகை, 'எஸ்' வகை, 'சி' வகை, 'டி' வகை இப்படி பல்வேறு வகையான அளவுக்கு தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று ஸ்டார் ஹோட்டல் கட்டுகின்ற முறையில் அரசாங்கம் ஈடுபடவில்லை. தனியார் துறையினர் கட்டுவதற்கு முயற்சி செய்வார்களேயானால் அதைப்பற்றி அரசு யோசிக்கும்.